☞ 2018 முதல் இன்றுவரையிலான மாநில கையிருப்பு படிப்படியாக உயர்ந்து முதல்முறையாக ரி.ம. 1 பில்லியனை கடந்தது. ஊழலற்ற ஆட்சியின் திறனை இது புலப்படுத்துகிறது.

☞ முந்தய தேசிய முன்னணி ஆட்சியில் (2017) வெறும் ரி.ம. 1.41பில்லியனாக இருந்த முதலீடு இன்று நேர்மையான ஆட்சியின் பலனாக மாநில அரசாங்க பல உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை உருவாக்க இது துணைபுரியும்.

☞ நெகிரி மாநில நம்பிக்கை கூட்டணி அரசாங்கத்தின் 2019–ஆண்டுக்கான முதல் வரவுசெலவு திட்டத்தில் மக்களுக்கான 33 நேரடி உதவிகள் அறிவிக்கப்பட்டன. அத்திட்டத்தை படிப்படியாக உயர்ந்து 52 திட்டங்களாக 2022 மாநில வரவுசெலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்டன.

☞ 2019 முதல் நெகிரி





# நெகிரி மாநில நம்பிக்கை கூட்டணி

## அரசாங்கத்தின் 4 ஆண்டு கால அடைவுநிலைகள்

பெற்று முறையே 2019 – ரி.ம.6.96 பில்லியன், 2020 –ரி.ம.7.93 பில்லியன் (வரலாற்றுபூர்வ பதிவு) மற்றும் 2021 – ரி.ம. 5.76 பில்லியன் (கோவிட் காலகட்டம்) பதிவுசெய்துள்ளது. இந்த ஆண்டு ரி.ம. 10 பில்லியனை மாநில அரசாங்கம் இலக்காக கொண்டுள்ளது.

☞ படிக்கும் பழக்கத்தை மேலும் உயர்த்த பழைய நிலையில் இருந்த நூலகத்தை மாநில அரசாங்கம் சகல வசதியுடனும் புதிய பொழிவுடனும் புதிய இடத்தில் அமைத்துள்ளது. அறிவார்ந்த சமுதாயத்தை நம்பிக்கை கூட்டணி அரசின் வருவுசெலவு திட்டத்தில் துன்ஸ் (TUNS) சிறுதொழில் வியாபாரிகளுக்காக உதவி திட்டம் அறிவிக்கப்பட்டு ரி.ம. 3 மில்லியன் ஒதுக்கப்பட்டது. இத்திட்டம் கட்டம்கட்டமாக உயர்ந்து 2020,2021 மற்றும் 2022 வரை ரி.ம. 12 மில்லியன ஒதுக்கீட்டுடன் சுமார் 7 ஆயிரம் சிறுதொழில் வியாபாரிகள் பயனடைந்தனர். மேலும் 2021 முதல் துன்ஸ பிலாஸ் (TUNS PLUS) திட்டம் அதாவது வட்டியில்லா கடனுதவி திட்டம் சுமார் ரி.ம. 6 மில்லியனுடன் தொடங்கப்பட்டு 400 மேற்பட்டவர்கள் பயனடைந்துள்ளனர் (2021–2022).

☞ கல்வியில் யாரும் பின்தங்கிய நிலையில் இருக்கக்கூடாது என்ற சீரிய எண்ணத்தில் நெகிரி மாநில நம்பிக்கை கூட்டணி அரசு பல உதவி திட்டங்களை செயல்படுத்தியது.:

– பள்ளிகளை சீரமைக்க ரி.ம. 2.5 மில்லியன் ஒதுக்கப்பட்டது (பள்ளி சீரமைப்பு அறக்கட்டளை தோற்றுவிக்கப்பட்டது).

– சமய பள்ளி/ ஆரம்ப தமிழ் மற்றும் சீனப்பள்ளி/ தனியார் பள்ளிகளின் மேம்பாட்டுக்காக ரி.ம. 2.5 மில்லியன்.

– பள்ளி மாணவர்களுக்கான உதவி








– முதல் தரத்துடன் பட்டப்படிப்பை முடித்த மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ரி.ம. 5000 மாநில அரசாங்கத்தால் வழங்கப்படுகிறது.

மகளிருக்கான மேம்பாட்டு திட்டத்திற்காக 2019 முதல் 2022 ஆண்டு வரை சுமார் ரி.ம. 6 மில்லியன் ஒதுக்கப்பட்டது.






திட்டத்திற்கு ரி.ம. 1 மில்லியன் (2020 – 1818 மாணவர்கள்), ரி.ம. 1.3மில்லியன் (2021 – 2400 மாணவர்கள்).

– மாதம் ரி.ம. 50 வீதம் தலா 1333 மாணவர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டன. இத்திட்டத்திற்கு சுமார் ரி.ம. 80 லட்சியம் ஒதுக்கப்பட்டன.

– அரசாங்க போலிடெக் மற்றும் உயர்கல்வி கழகங்களில் பயிலும் நெகிரி செம்பிலான் மாநிலத்தில் பிறந்த மாணவர்களுக்கு மாநில அறக்கட்டளை வாயிலாக ரி.ம. 100 உதவித்தொகையாக மாதந்தோறும் வழங்கப்படுகிறது. 2022 முதல் இத்தொகை ரி.ம. 150 உயர்த்தப்பட்டுள்ளது.

– அரசாங்க மற்றும் தனியார் உயர்கல்வி கழகங்களில் பயில வாய்ப்பு கிடைத்த மாணவர்களுக்கு முறையே ரி.ம. 1000 (இளங்கலை,முதுகலை பட்டப்படிப்பு), ரி.ம. 750 (டிப்ளோமா) மற்றும் சான்றிதழ் படிப்புக்கு ரி.ம. 500 வழங்கப்படுகிறது.

PH GEM என்ற பிரிவின் மூலம் இதுவரை சுமார் 23 ஆயிரம் மகளிர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

☞ உடல் அறுவை சிகிச்சைக்கான (எலும்பியல் – implan orthopedik) உதவியையும் மாநில அரசாங்கம் உருவாக்கியது. இதற்காக ரி.ம. 1 மில்லியன் ஒதுக்கப்பட்டு சுமார் 100–க்கு மேற்பட்டோர் பயனடைந்துள்ளனர்.

☞ 14–வது பொதுத்தேர்தலில் நெகிரி மாநில நம்பிக்கை கூட்டணி வாக்குறுதியான இஸ்லாம் அல்லாத விவகார பிரிவு உருவாக்கப்பட்டு 2019 முதல் 2022 வரையிலான ஆண்டுகளில் இஸ்லாம் அல்லாத வழிபாட்டு தலங்களுக்கும் அரசு சார்பற்ற சங்கங்களுக்கும் ரி.ம. 5.8 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இஸ்லாம் அல்லாத வழிபாட்டு தலங்களுக்கு இதுவரை 17 அரசாங்க நிலங்கள் மாநில பதிவேட்டில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இன்னும் அதிகமான விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன.

